(Under Section.173 BNSS)

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102168

10/2024/AC/CB

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் VAC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 10/2024/AC/CB Date: நாள் 08.10.2024

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.9.24 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 7.10.24 Time to : நேரம் வரை 1200hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 8.10.24 Time நேரம் : 09.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.10.24 Time நேரம் : 09.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Tamil Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Approx. 19 km southern east
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o Sub Register Singanallur, Vellalore, Coimbatore
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Karuppusamy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Senniappan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 63/24 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி 17, Dhanalakshmi Nagar Extn, Siddhapudur, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. Nancy Nithya Caroline, Sub Registrar, Singanallur Sub Register office, Vellalore, Cbe.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay —

(Under Section.173 BNSS)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 8/10/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 8/10/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
8.10.2024 at 1045 hrs.

Name: பெயர் C. LATHA
Rank: நிலை Inspector of police, No. எண் ..........
VRAC,
Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2024/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி–

இன்று 08.10.2024 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 09.15 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.லதா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை, சித்தாபுதூர், தனலட்சுமிநகர் விரிவு, கதவு.எண்.17 ல் வசிக்கும் சென்னியப்பன் என்பவரது மகன் திரு.S.கருப்புசாமி, என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் S.கருப்புசாமி, வயது-63, த/பெ.சென்னியப்பன், கதவு.எண்.17, தனலட்சுமி நகர் விரிவு, சித்தாபுதூர், கோவை–641044. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் கடந்த 30 வருடங்களாக வசித்து வருகிறேன். அதே கட்டிடத்தில் தரைதளத்தில் நானும் எனது மகன் S.K.நவீன் ஆகியோரும் சேர்ந்து M/s.Gem Precision Tool Pvt Ltd என்ற பெயரில் தொழில் நிறுவனம் நடத்தி வருகிறோம். எனது தகப்பனார் பெயர் சென்னியப்பன், என்னுடன் பிறந்தவர்கள் 2 அண்ணன்கள் மற்றும் 2 அக்காக்கள் ஆகும். எனது தகப்பனாருக்கு சொந்தமாக கோவை பீடம்பள்ளி கிராமத்தில் சுமார் 10.28 ஏக்கர் பூமி இருந்தது. எனது தகப்பனார் கடந்த 11.01.2006 ல் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு முன்பு மேற்படி சொத்தை என்னுடைய மகன் திரு.S.K.நவீனுக்கும், என்னுடைய அண்ணன்களின் மகனான திரு.K.ஆனந்த் மற்றும் மகள்கள் திருமதி.K.பானுப்பிரியா மற்றும் திருமதி.பூர்ணிமா (எ) பூர்ணிமா பார்வதி ஆகியோர்களுக்கு கடந்த 24.01.2002 ல் உயில் சாசனம் எழுதி ஆவண எண்.15/2002 ஆக பதிவு செய்துவைத்திருந்தார். தற்போது மேற்படி சொத்தை எங்களது மகன் மற்றும் மகள்களுக்கு பாகசாசனம் செய்து பத்திரம் பதிவு செய்து வைக்க முடிவு செய்து கோவை, வெள்ளலூரில் உள்ள சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள பத்திர எழுத்தர் திருமதி.முத்துமணி என்பவரை கடந்த 30.09.2024 ல் அணுகி பாகசாசனம் தயார் செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தை பதிவு செய்ய 04.10.2024 ல் சார்பதிவாளர் அலுவலகத்தில் டோக்கன் பெறப்பட்டது. இது சம்மந்தமாக பத்திர எழுத்தர், சார்பதிவாளரை பார்த்துவிட்டு வந்து பத்திரபதிவு செய்ய முத்திரைதாள் மற்றும் பதிவு கட்டணம் போக சார்பதிவாளருக்கு தனியாக ரூ.1,50,000/– கொடுக்க வேண்டும் என்று சார்பதிவாளர் கூறியதாக சொன்னார். நான் எதற்கு அவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது சார்பதிவாளர் சொன்ன பணம் தரவில்லை என்றால் பதிவு

முடிந்த பின்னர் சார்பதிவாளர் அசல் பத்திரம் தராமல் நிலுவையில் போட்டு விடுவார் என்று பத்திர எழுத்தர் கூறினார். இதனால் நான் பத்திர எழுத்தருடன் கடந்த 30.09.2024 ஆம் தேதி மாலையில் சார்பதிவாளர் திருமதி.நான்சி நித்யா காரோலின் அவரது அலுவலகத்தில் சந்தித்து அவரிடம் தங்களுக்கு தனியாக பணம் தர வேண்டும் என்று பத்திர எழுத்தர் கூறுகிறார், பணம் அதிகமாக உள்ளது என்று சொல்ல, அதற்கு அவர் நான் குறைவாகத்தான் கேட்கிறேன் ஆவணத்தை பதிவு செய்து முடித்த பிறகு வாருங்கள் பேசிக்கலாம் என்று கூறிவிட்டார். பின்னர் கடந்த 04.10.2024 ஆம் தேதி கோவை, வெள்ளலூரில் உள்ள சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எங்களது பிள்ளைகளுக்கு மேற்படி சொத்தை அவர்களது பெயரில் பாகசாசன பத்திரம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு நானும் எனது அண்ணன் கந்தசாமியும் சாட்சிகளாக இருந்தோம். பின்னர் அன்று மாலையில் மேற்படி ஆவணம் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதாக குறுஞ்செய்தி வந்தது. இதனால் நான் பத்திரஎழுத்தர் திருமதி.முத்துமணியிடம் கேட்ட போது அவர் சார்பதிவாளர் ரூ.75,000/– மாவது கொடுக்க சொன்னதாக கூறினார். நான் எதற்கு இவ்வளவு அதிகமாக பணம் கேட்கிறார்கள் என்றும் ஏற்கனவே பத்திரபதிவிற்கு ரூ.6,57,850/– வரை செலவு செய்துவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு பத்திர எழுத்தர், சார் நீங்களே நேரில் போய் சார்பதிவாளரை சந்தித்து பேசிகொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். எனக்கு மறுநாள் வேலை இருந்ததால் நான் நேற்று 07.10.2024 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார்பதிவாளர் திருமதி.நான்சி நித்யா காரோலின் அவர்களை சந்தித்து எங்களது நிலுவையில் உள்ள ஆவணம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு சார்பதிவாளர், உங்களுடைய ஆவணம் நிலுவையில் வைத்துள்ளேன் என்றும் மாலைக்குள் நிலுவையில் இருந்து விடுவித்து விடுவதாக கூறி பணம் சம்மந்தமாக கேட்டார். அதற்கு நான் பத்திர எழுத்தர் தாங்கள் கேட்டதாக சொன்ன பணம் ரூ.75,000/– ஆயிரம் மிக அதிகமாக இருக்கிறது என்று சொல்ல அதற்கு அவர் என்னிடம் உங்களால் எவ்வளவு பணம் தர முடியும் என்று கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே பத்திரம் பதிவு செய்ய அதிகம் செலவு ஆகிவிட்டது என்று கூறி கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.35,000/– ஆயிரம் கொடுங்கள் என்றும் இது சம்மந்தமாக யாரையும் போய் பார்க்க வேண்டாம் என்றும், நாளை காலையில் பணத்துடன் என்னை வந்து சந்தித்து நான் சொல்லும் நபரிடம் கொடுத்து விட்டு செல்லுங்கள் என்றும் கூறினார். நான் சரி என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன். பிறகு நான் வீட்டிற்கு வந்து எனது குடும்பத்தாருடன் கலந்தாலோசனை செய்து பார்த்ததில் மேற்படி நிலுவையில் உள்ள பாகசாசன ஆவணத்தை பெறுவதற்காக சிங்காநல்லூர் சார்பதிவாளர் திருமதி.நான்சி நித்யா கரோலின் அவர்கள் கேட்கும் லஞ்ச பணம் ரூ.35,000/– ஐ கொடுக்க விருப்பமில்லை.

எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 08/10/2024 (S.KARUPPUSAMY) இடம் – கோவை, தேதி – **08.10.2024.** மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டு, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 08.10.2024 ம் தேதி காலை **09.45** மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2024/AC/CB u/s.7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி திருமதி.நான்சி நித்யா கரோலின், சார்பதிவாளர், சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம், வெள்ளலூர், கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Respected Sir, Received the complaint on 08.10.2024 at 09.15 hrs Sd/- x-x-x-x 08/10/2024 (C.LATHA), Inspector of Police, V&AC, Coimbatore. Respected Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.10/2024/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 08.10.2024 at 09.45 hrs. Sd/- x-x-x-x 08/10/2024 (C.LATHA), Inspector of Police, V&AC, Cbe. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

8/10/2024

(C.லதா)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.